[1992 பிப்ரவரி 10

பிற்பகல் 12-20

(ஈ) டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் சென்னை (திருத்த) சட்டமுன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம் சென்னை (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன் வடிவு எண். 3/1992) *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெறவேண்டுமென்று மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கோருவார். மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (திருத்த) சட்ட முன் வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 3/1992) ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்)

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பெறுகிறது.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய திருத்தங்கள் இல்லை.

பிரிவுகள் 2 முதல் 4 முடிய சட்டமுன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ''ஆம்'' என்க. (ஆம்.).

மறுப்போர் ''இல்லை'' என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் எனக் கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

---

*5–2–1992 ஆம் நாளிட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.

1992 பிப்ரவரி 10] [பேரவைத் தலைவர்]

பிரிவு 1, முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்க வேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் '' ஆம் '' என்க. (ஆம்.).

மறுப்போர் '' இல்லை '' என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. சு. முத்துசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

'' 1992 ஆம் ஆண்டு தமிழ்நாடு டாக்டர் எம்.ஜி.ஆர். மருத்துவப் பல்கலைக் கழகம், சென்னை (திருத்த) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 3/1992) நிறைவேற்றப் பெற வேண்டும்.''

எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் ' ஆம் ' என்க. (ஆம்.)

மறுப்போர் ' இல்லை ' என்க. (இல்லை.)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது.

(உ) சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்த) சட்ட முன்வடிவு, 1992.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' 1992 ஆம் ஆண்டு சென்னைப் பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீரகற்றல் (திருத்த) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவைச் சட்டமுன்வடிவு எண் 5/1992) *ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்'' என்று மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் கோருவார். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர்.

---

* 7-2-1992 ஆம் நாளிட்ட அரசிதழில் வெளியிடப்பட்டுள்ளது.